| பாடம் | 15 |
|---|---|

# 15 மன்னிப்பின் மேன்மை

## இயேசு மனுமக்களின் பாவங்களை மன்னிக்கிறார்

இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்களை மன்னித்து, அவர்களை விடுவிக்க வந்தார். இது கிறிஸ்தவர்களின் முக்கியமான, தனித்துவமிகு அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்றாகும்.

**'மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு.'**

இந்த உண்மையை இயேசு பல சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தினார். **"மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது"** என்று கூறி, தாமாகவே நேரடியாகப் பாவங்களை மன்னித்தார். இறுதியில் பாவத்தின் சிகரமாகிய சிலுவை மரணத்தின் போது, மன்னிப்பின் ஊற்றை அனைத்து மக்களுக்கும் தம் தியாக பலியினூடாகத் திறந்து விட்டார்.



சிலுவையில் அறைந்த போதும், சித்திரவதை செய்தவர்களுக்காக **"தந்தையே இவர்களை மன்னியும் தாங்கள் செய்வதென்னவென்று அறியார்கள்"** என்று பிரார்த்தித்தாரே!

## மன்னிப்பு பெறாத மக்கள்

இயேசுவின் மன்னிப்பை பெற்று அனுபவித்திடும் மக்களாக இன்று கிறிஸ்தவர்கள் வாழுகிறார்கள். எனவே மன்னிப்பை பெற்ற நாமும் பிறரை மன்னித்தல் இயல்பாகும். மன்னிப்பின் சிறப்பு நம் வாழ்வில் ஆண்டவரின் மன்னிப்பை பிரதிபலிக்கச் செய்கிறது.

> பிறரை மன்னிக்கத் தெரிந்தவரே கடவுளின் மைந்தராவர். மன்னிப்பு கொடுத்திடு அப்போது உன் பாவம் உனக்கு மன்னிக்கப்படும்.

மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்.

**மத்தேயு 6:14**

## மன்னிப்பின் எல்லை

“என் சகோதரர் ஒருவர் எனக்கு எதிராக பாவம் செய்தால் எத்தனை முறை அவனை மன்னிக்க வேண்டும்?”

இக்கேள்வியை பேதுரு ஆண்டவரிடம் கேட்டார். அன்று பேதுரு, ஒருவர் தனக்கெதிராகச் செய்த பாவங்களை மன்னிப்பது ஏழு தடவை தானே, என்று விளம்பியபோது, இயேசு, **“அல்ல, பாவங்கள் செய்திடும் ஏழெழுபது தடவையுமே“** என்றார். நாம் எத்தனை முறையும் நமது எதிரிகளை மன்னிக்கலாம் என்பதையே ஆண்டவரின் விடை வலியுறுத்துகிறது. மன்னிப்பு கொடுப்பதற்கு வரம்பே கிடையாது.

## மன்னிப்பின் தன்மை

மனனம் செய்வோம்

கடவுள் உங்களை கிறிஸ்து வழியாக மன்னித்தது போல, நீங்களும் ஒருவரையொருவர் மன்னியுங்கள்.”

**எபேசியர் 4:32**

விண்ணரசின் விழுமியமான மன்னிப்பளித்தலைப் பற்றி விளக்குவதற்கு இயேசு அழகானதொரு உவமைக் கதையைக் கூறினார்,

## பிறரை மன்னிப்போம்

**மன்னிக்க மறுத்த பணியாள்** மத்தேயு 18:21–35



**அரசர்:**
'உன் உடமை யாவற்றையும் விற்று பத்தாயிரம் தாலந்து கடனைத் திருப்பித் தா.'



**பணியாள்:**
'என்னைப் பொறுத்தருளும்: எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்.'

அரசர்: பரவாயில்லை; உன் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்கிறேன்.



**பணியாள்:**

நீ பட்ட 100 தினாரி கடனைத் திருப்பித்தா.



**உடன் பணியாள்:**
என்னைப் பொறுத்தருளும், நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

**பணியாள்** : முடியாது; இவனைச் சிறையிலடையுங்கள்.



**அரசர்:**

"பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக்கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தேன். நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல் நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டி இருக்க வேண்டும் அல்லவா?



(பணியாளருக்கு தண்டனை கொடுக்கிறார்)



**மனந்திரும்புதல்** என்பது கடவுள் பக்கம் திரும்பும் செயலாகும். கடவுளுக்கு எதிராய்ச் செயல்படுபவர் கடவுள் பக்கமாக செயல்பட ஆரம்பித்தலாகும்.

இயேசுவின் 'மன்னிக்கும்' செயல்பாடு இதையே செய்கிறது.

சகேயுவின் புதிய வாழ்வு இதற்குச் சிறந்த உதாரணமாகும்.



## நாம் கற்றுக்கொள்பவை

- மன்னிப்பு அளிப்பதற்கு வரம்பில்லை, ஏனெனில் கிறிஸ்து நமக்கு வழங்கும் மன்னிப்பு எல்லையற்றது.
- ஒருவர் மன்னிப்பு பெறுவதும், அவர் பிறருக்கு மன்னிப்பு வழங்குவதும் பிரிக்க முடியாத செயல்களாகும்.
- எனவே மன்னிப்பு எதிர்பார்ப்பவர் பிறரை மன்னிக்க ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.
- மன்னிப்பு பெறுதலும் கொடுத்தலும் இறையரசின் பிள்ளைகளின் முக்கிய பண்பு இதன் மூலம் இறைவனுக்கேற்ற சமுதாயத்திற்கு நாம் வித்திடலாம்.

## செயன்முறை

'மன்னிப்பு, மன்னிப்பு, மன்னிப்பு தேவா' என்ற பாடலை கருத்துடன் யாவரும் சேர்ந்து பாடவும்.

## செயற்பாடு

1. மன்னிப்பு கடவுளின் ............................ ஆகும்.
2. மன்னிப்பு, மனம் ............................ யாவருக்கும் உரியது.
3. மன்னிப்பு எதிர்பார்ப்பவர்கள் .......................... மன்னிக்க ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.
4. இயேசு நீதிமான்களையல்ல .......................... மனந்திரும்புதலுக்கு அழைக்க வந்தார்.